புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சங்க கால அவ்வையாரின் அகப்பாடல்களில் வாழ்வியல் கூறுகள்

முனைவர். ர. தமிழ்ச்செல்வி,
எம்.ஏ, எம்.பி.ல், பி.எச்.டி
வள்ளியம்மாள் பெண்கள் கல்லூரி, அண்ணாநகர், சென்னை.

ஆய்வுச்சுருக்கம்:

சங்க கால அகப்பாடல்களில் அவ்வையார் பாடியதாக 26 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளது. அப்பாடல்களில் காணப்படும் வாழ்வியல் கூறுகளான பிரிவுத் துயர், தன்நெஞ்சுக்கு உரைத்தல், ஆற்றியிருத்தல், வரைவு கடாதல், காதலர்படும் துயர் போன்றவற்றை இவ்வாய்வு எடுத்து இயம்புகிறது. அகப்பாடல்களில் முதல், கரு, உரிப்பொருளையும் இயற்கையோடு இணைத்து நாடகப்பாங்கில் காதலை சிறப்பிப்பது அவ்வையின் திறம். சங்க காலத்தில் அகவாழ்க்கையில் தலைவியின் கற்புத்திறன், மனவலிமை, அக்கால வாழ்வியல், குடும்ப அமைப்பு, காதல் வாழ்வு போன்றவற்றை இக்கட்டுரை ஆய்வு செய்து தமிழர்களின் பண்பாட்டு பெருமையை அவ்வையின் பாடல்கள் வழி உலகறியச் செய்கிறது.

## முன்னுரை :

சங்கத் தமிழர்களுக்கு காதலும் – வீரமும் இரு கண்கள். வாழ்வியல் ஒழுக்கத்தை அகம் புறம் எனப் பகுத்தனர். சங்க அகப்பாடல்கள் அக்கால மக்களின் வாழ்வியலோடு பிணைந்தது. அகவாழ்வினை நாடகப்பாங்கில் சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகிறது. சங்க இலக்கிய அகப்பாடல்களில் பெண்பால் புலவர் அவ்வையார் பாடிய பாடல்களாக 26 பாடல்கள் (அகநானூறு – 4, நற்றிணை – 7 மற்றும் குறுந்தொகை – 15) தொகுக்கப்பட்டுள்ளது. இதில் தமிழர்களின் வாழ்வில் காதல், களவு – கற்பு ஒழுக்கம், அறத்தொடு நிற்றல், பிரிவாற்றாமை, இயற்கை பின்புலம், பரத்தமை போன்ற வாழ்வியல் கூறுகள் விரவியுள்ளன. அதில் அவ்வையாரின் பாடல்கள் வழி சங்ககால மக்களின் அகவாழ்வின் மேன்மையை இவ் ஆய்வுக் கட்டுரை வழி காண்போம்.

## ஆய்வு நெறிமுறைகள்:

இவ் ஆய்வில் வரலாற்றியல் (Historical Approach) அணுகுமுறை மற்றும் விளக்க முறை திறனாய்வு (Descriptive Criticism) பின்பற்றப்பட்டுள்ளது.

## குறுந்தொகை பாடல்கள் :

அவ்வையின் அகபாடல் மாந்தர்கள் அனைவரும் எதாவது ஒரு தருணத்தில் உரையாடுகின்றனர். அந்த உரையாடல் தனித்தோ மற்றவர்களுடனோ அமைகிறது. அந்த வகையில் தலைவி கூற்று நிகழும் சூழல்கள் பலவாகும். அவ்வையின் குறுந்தொகை பாடல்கள் தலைவி கூற்றுப்பாடல்களாகவே அமைந்துள்ளது. குறுந்தொகையின் 15 பாடல்களும் 4 வகையாக பகுக்கலாம். அவை,

1) பிரிவுத்துயரால் வருந்தும் தலைவிக் கூற்று
2) தலைவி தன்நெஞ்சுக்கு உரைத்தல்
3) தலைவி இரங்கல் கூற்று
4) ஆற்றியிருக்கும் தலைவியின் கூற்று

பிரிவுத்துயரால் வருந்தும் தலைவி கூற்றாக மூன்று பாடல்கள் (28, 39, 43) உள்ளன. தலைவனை பிரிந்த தலைவி 'தன் துன்பம் அறியாமல் ஊரார் உறங்குகின்றனரே' என வருந்துகிறாள். தன் துயர நெஞ்சத்தை அறிவிப்பதற்காக 'முட்டுவேனா? தாக்குவேனோ ஆ ஒல் என ஒலி எழுப்பிக் கூப்பிடுவேனோ? எதை செய்வேன் என்று அறியேன்' என்று தலைவி பிரிவாற்றாமையால் புலம்புவது தொல்காப்பியர் வழியில் "கிழவனை மகடூஉப்புலம்பு பெரி தாகலின ஊர்க்கே அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்" என்ற கூற்று முறையில் வகுக்கலாம் [1] அப்பாடல்

"முட்டுவேன்கொல்? தாக்குவென்கொல்"
ஒரேன், யானும் ஓர் பெற்றிமேலிட்டு
ஆ அ! ஒல், எனக் கூவுவேன் கொல்?
அலமரல் அசைவளீ அசைப்ப என்
உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே[2]"

இப்பாடலில் தலைவி தலைவனைப் பிரிந்த துயரின் எல்லை உணர்ந்தவளாய், பிரிவுத் துயர் நீக்கும் வழி அறியாதவளாய் தவித்துப் புலம்புவதையும், இரங்கல் கூற்றில் தலைவனைப் பிரிந்தே தலைவி கார்கால வரவினைக் கண்டு வருந்துபவளாக காட்சியளிக்கிறாள். பிரிவுத் துன்பத்தை தாங்கவியலாத தலைவி,

"உள்ளீன் உள்ளம் வேமே
உள்ளா திருப்பினெம் அளவைத்தன்றே
வருந்தி வான்றோய் வற்றே காமம்
சான்றோ அல்லர் யாம் மரீஇ யோரே[3]"

காதலரை நினைத்தால், அவர் பிரிவு என்னும் தீயினால் நினைக்கின்ற என்மனம் வேகா நிற்கும். காமநோய் எம்மை சாகும்படி வருந்தச் செய்கிறது. இதற்கு வேதனையைத் தந்த தலைவன் சான்றோன் அல்லன் என்று பழிக்கிறாள்.

அவ்வையாரின் அகப்பாடல்களில் தலைவிக் கூற்றுப்பாடல்கள் (8) தலைவியின் பிரிவாற்றாமையயே பெரிதும் கூறி நிற்கின்றன[4] . தலைவனை பிரிந்து வருந்துவதாயும், புலம்புவதாயும் ஆற்றி இருப்பதாகவும் அமைகின்றன.

அகநானூற்றுப் பாடல்கள் :

அகநானூற்றில் அவ்வையின் நான்கு பாடல்களும் (11, 147, 273 மற்றும் 303) பாலைத் திணைக்குறியவை. அவை அனைத்தும் தலைவி கூற்றாகவே பாடியுள்ளார். பாலை நிலத்தின் உரிபொருள் அக ஒழுக்கத்தில் பிரிதலும், பிரிதல் நிமித்தமும் ஆகும். அது பிரிவுத்துயரத்தை காட்டும்.

பிரிவுத்துயர் :

"நீர் வார் நிகர் மலர் கடுப்ப, ஓ மறந்து
அறுகுளம் நிறைக்குந போல, அல்கலும்
அழுதல் மேபல ஆகி
பழிதீர் கண்ணும் படுகுவ
மன்னே[5]!

தலைமகன் பொருள்வயிற் பிரிந்த இடத்து, ஆற்றாளாய தலைமகள் வேறுபாடு கண்டு ஆற்றாளாய தோழிக்கு தலைமகள் 'ஆற்றுவல்' என சொல்லியது. நீர் சொறியும் மலர் போல கண்மலர் அழுதாக பிரவித்துயரினை விளக்குகிறார்.

அவர் பொருளீட்டச் சென்றபின் நான் இங்கிருந்து என்ன செய்யப் போகிறேன்? நானும் அவருடன் செல்கிறேன் என சொல்ல வந்த அவ்வை,

"வெள்ளி வீதியைப்போல நன்றும்
செலவு அயர்ந்திசினால் யானே ; பல
புலந்து[6]"

என வெள்ளிவீதி என்னும் பெண் புலவர் தன் தலைவனைத் தேடிச் சென்றது போல தலைவன் இருக்குமிடம் செல்ல விரும்புகிறாள். இங்கு உண்ண முடியவில்லை, தினமும் வருந்தி என்ன செய்யப்போகிறேன் என பிரிவு எண்ணத்தினை வெளிப்படுத்துகிறார்.

காதல் மரம் :

பிரிவின்கண் தலைமகள் அறிவு மயங்கி தோழிக்கு சொல்லியது இப்பாடல். இதில் காதல் மரம் என " புலவர் புகழ்ந்த நார் இல் பெருமரம்[7]" என காதல் நோய் வளர்ந்து, தளிர்விட்டு அம்பல் என்னும் மொட்டு விடும், அலர் என்னும் அரும்பாக பெருக்கும் என ஊர் பேசும்படி ஆகிவிட்டதை நாம் வருந்தும் உலகம் பற்றி தலைவன் நினைத்தும் பார்க்கவில்லை என புலம்புகிறாள்.

நீர் உள்ள குளம் தலைவனின் இருப்பிடம் :

பிரிவுத்துயர் மிகுதியால், நீர் வற்றிய குளத்தில் உள்ள மீனை நீர் உள்ள குளத்திற்கு கொண்டு செல்வது போல் என்னை காதலர் உள்ள இடத்திற்கு யாராவது கொண்டு செல்ல வேண்டும் என ஏங்குவதாக இப்பாடல் தலைவி கூற்றாக அமைந்துள்ளது. அப்பாடல்

..... ஆர்க்கும் சுரன் இறந்து,
அழிநீர் மீன் பெயர்ந்தாங்கு, அவர்
வழிநடைச் சேறல் வலித்திசின், யானே[8] .

இப்பாடலில் கொல்லிமலைத் தலைவன் பொறையனின் காடு பற்றியும், பறம்புமலைப் பாரியையும், அவன் கொடைத்திறத்தையும், மூவேந்தர் முற்றுகை இட்டிருந்த காலத்தில் அவன் வளர்த்த குருவிக்கூட்டம் காலையில் பறந்து மாலை வரும்போது நெற்கதிர்களோடு திரும்பிய செய்தியும், அதை உண்டு அரசுச் சுற்றம் வாழும் என மிகப்பெரும் வரலாற்றுச் செய்திகளை இப்பாடல் வழிக் கூறுகிறார். இவ்வாறு பிரிவுத்துயர் பாடல்களில்கூட வரலாற்றுச் செய்திகளை பொருத்தமான இடத்தில் கூறிச்சென்றது அவ்வையின் தனிச்சிறப்பு.

நற்றிணைப் பாடல்கள் :

அவ்வையின் நற்றிணைப் பாடல்கள் ஏழில் குறிஞ்சி (129), மருதத்தில் (390) ஒன்றும், நெய்தல் திணையில் இரண்டும் (187, 295) முல்லைத் திணையில் மூன்று பாடல்கள் (371, 381, 394) எனப் பாடியுள்ளார். வரைவு கடாவுதல் வேண்டி தோழிக் கூற்றாக,

"எந்தை, வேறுபல் நாட்டுக் கால்தர வந்த
பலலினை நாவாய் தோன்றும் பெருந்துறை
கலி மடைக் கள்ளின் சாடிஅன்ன, எம்
இளநலம் இற்கடை ஒழியச்
சேறும், வாழியோ! முதிர்கம்யாமே[9]"

சிறைப்புறத்தில் இருக்கிறாள் தலைவி – தாயின் பாதுகாப்பில் உள்ளார். தந்தை பெருந்துறை சேர்ந்து வீடு வந்து கொண்டு இருக்கிறார். தலைவின் இளமை, பொங்கும் மடைநுரை கொண்ட கள்ளுச்சாடி போன்றது. அந்த இளமை பிறரை மணந்து கொள்ளாமல் முதிர்ந்து கிடக்கும், விரைந்து வா என தலைவனை வந்து தலைவியை மணந்து கொள் என அழைப்பதாகும்.

தலைவன் பாகனிடம் தேரைவிரைந்து ஓட்டு, மழைக்காலத்தில் திரும்பி விடுவேன் என்று சொன்னேன் அல்லவா?

"பெயல் தொடங்கினவே, பெய்யா வானம்;
நிழல் திகழ் சுடர்த்தொடி ஞெகிழ ஏங்கி
அழல் தொடங்கினனே ஆயிழை; அதன் எதிர்
குழல் தொடங்கினரே கோவலர்…….[10] "

மற்ற அகப்பாடல்களில் தோழி மற்றும் தலைவிக் கூற்றாக பாடிய அவ்வை இப்பாடலில் மட்டும் தலைவனின் எண்ணத்தை படம் பிடிக்கிறார். இவ்வாறு அகவாழ்க்கையில் தலைவியின் கற்புத்திறன், மனவலிமை, அக்கால வாழ்வியல் போன்றவை சிறக்க பாடியவர் அவ்வையார்.

*இயற்கைப் பின்புலம் :*

*மனித சக்தியில்லாமல் தானே தோன்றியவை இயற்கை. இயல்பானது இயற்கை.*

*“நிலம் நீர் தீ வளி விசும்பொடு*
*ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்[11]”*

*என தொல்காப்பியர் கூறுவார். இதன் அடிப்படையில் தான் சங்கத் தமிழரது நிலமும் பொழுதுமே முதற் பொருள். அவ்வையாரின் பாடல்களில் முதற்பொருள் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. அகநானூற்றில் நான்கு பாடல்களும், பாலை திணைக்கு உரியவை. அப்பாடல்களில் இயற்கை வருணனை மிகச்சிறப்பாக இருப்பதை காணலாம்.*

*“வானம் ஊர்ந்த வயங்குஒளி மண்டிலம்[12] “*

*வானத்தில் ஓங்கி உயர்ந்து விளங்கும் நெருப்பு பந்தானது பூமியில் உள்ள அனைவருக்கும் நல்லவர் கெட்டவர் என்ற பாகுபாடு இன்றி ஒளியைத் தருகிறது என இயற்கையைப் பொதுவாக்குகிறார்.*

*பறக்கும் நாரைக் கூட்டத்தை,*

*“விசும்பு விசைத் தெறிந்த*
*கூதலிங் கொதையின்*
*பசுங்கால் வெண் குருகு[13] “*

*கூதள மலர்களைக் கொண்டு கட்டிய மாலையை வானில் வீசி ஏறிந்தால் எப்படி இருந்ததோ, அப்படி இருந்தது வெண் நாரை கூட்டத்தின் அணிவகுப்பு என இயற்கையை வருணிக்கிறார்.*

*நற்றிணையில் – இடி, மின்னல் மாலை நேரம் என மழைவரும் காலத்தை வருணிக்கும் போது.*

*“கேழ் கிளர் உத்தி அரவுத் தலை பனிப்ப*
*படுமலை உருமின் உரற்று குரல்[14] “*

*மலையடுக்கின் சாரலில் வாழும் பாம்புகள் – அஞ்சி பயப்படுமாறு விரைந்தெழும் இடியோசையுடன், காற்றோடு கலந்து வரும் மேகத்திரள் அஞ்சச் செய்கிறது என்கிறார்.*

*“"காயாக் குன்றத்துக் கொன்றை போல*
*மாமலை விடரகம் விளங்க மின்னி ……..*
*வியலிரு விசும்பகம் புதையப் பாஅய்ப்*
*பெயல் தொடங்கினவே பெய்யா வானம்[15]”*

*காயாம் பூக்களிடையே கொன்றை பூத்தவாறு, கருநிற மேகத்திடையே தோன்றும் மின்னல் ஒளி தோன்றியதால் மலைப்பகுதி பிளவுகளைக் காண முடிகிறது என்றும், பின்னர் மழை பொழியத் தொடங்கியது எனவும் அழகாக மழை நாளை காட்சிப்படுத்துகிறார்.*

*நீர்வளம், நிலவளம் நிறைந்த வயல் சூழ்ந்த இடங்களை தம் பாடலுக்கு பின்புலமாக அமைத்துள்ளார்.*

*"அரிற் பவர்ப் பிரம்பின் வரிப்புற வளைகனி*
*குண்டு நீரிலஞ்சிக் கெண்டை கதூஉம்*
*தண்டுறை ஊரன்[16]”*

*என நீர்நிலைக் காட்சியாக பிரம்பக் கொடியில் விளைந்த பழத்தை குளத்து மீன்கள் கொத்துவதாக படம் பிடிக்கிறார்.*

*முடிவுரை:*

*இவ்வாறு அகத்துறைப் பாடல்களில் அக்கால மக்களின் வாழ்வியல் கூறுகளை உணர்ச்சி பொங்க எடுத்து இயம்பியுள்ளார் அவ்வை. வாழ்வியல் சிக்கலுக்கு கேள்வி கேட்டு தீர்வும் கூறியுள்ளார். மனித இனத்திற்கு மட்டும் இவ்வுலகம் சொந்தமல்ல பஞ்ச பூதங்களையும் அதனோடு தொடர்புடைய இயற்கை காட்சிகள், பறவை. மீன்கள், விலங்குகள் என பல்லுயிர் வாழ்வையும், வளத்தையும் நாடகப் பாங்கில் காட்சிப்படுத்துவதில் அவ்வையார் தனித்து நிற்கிறார்.*

மேற்கோள்கள்

1. தொல் கற்பு - 145
2. குறுந் பா 28
3. குறுந் பா - 102
4. முனைவர் பா.இரேவதி, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மதுரை - வலைதளக் கட்டுரை
5. அகம் - 11
6. அகம் - 147
7. அகம் - 273
8. அகம் - 303
9. அகம் - 295
10. நற்றி - 371
11. தொல் - மரபு - 90
12. அகம் -11
13. அகம் 273
14. நற் - 129
15. நற் - 371
16. குறுந் – 91

********* ********* ********** ********* ********* ********** ********** **********